# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 27 திங்கட்கிழமை 12.09.2022 கதிர் 309


இனிது ரகசியம் அல்ல!

தேர்தல் என்பது மக்களுடன் ஓர் ஒப்பந்தம்தான். அதுவும் ஜனாதிபதி தேர்தல் என்பது மக்களுடன் நேரடியாகச் செய்யும் உடன்படிக்கை.

மஹிந்த ராஜபக்ஷ முன்வைத்த'மஹிந்த சிந்தனை'யில் இருந்து, கடந்த 2

# திருக்கோணேஸ்வரத்தைக் காக்க 3 முக்கிய தீர்மானங்கள்

## - யாழில் ஒன்றுகூடிய சைவ சமய அமைப்புக்களால் நிறைவேற்றம் -





(ந.லோகதயாளன்)

திருக்கோணேஸ்வரம் ஆலயத்தைப் பாதுகாக்கும் வகையில் மூன்று முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

திருக்கோணேஸ்வரம் ஆலயத்தை ஆக்கிரமிப்பதற்கு எதிராக சைவ சமய அமைப்புக்கள் யாழ்ப்பாணத்தில் நேற்று ஒன்றுகூடி ஆராய்ந்தபோதே இந்த மூன்று தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. 2

# தேர்தல் சீர்திருத்தங்களைச் செய்ய நாடாளுமன்றத்துக்குக் காலக்கெடு!



## 6 மாதங்கள் வழங்கினார் ஜனாதிபதி தவறினால் சர்வஜன வாக்கெடுப்பாம்

கொழும்பு,செப்ரெம்பர் 12

"தேர்தல் சீர்திருத்தம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் உடன்பாடு எட்டப்பட வேண்டும். இது தொடர்பில் கட்சிகள் ஆராய்ந்து வருகின்றன. அவர்களுக்கு ஆறு மாதங்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. கட்சிகளிடையே உடன்பாடு ஏற்படாவிட்டால் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி, உகந்த தேர்தல் முறை தொடர்பாக மக்களிடம் விருப்பத்தை கோருவேன். அரசியல் கட்சிகளால் இந்தப் பிரச்சினைகளை என்றைக்கும் தள்ளிப் போட முடியாது."

- இவ்வாறு நேற்று அறிவித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. 2

# கொழும்பிலுள்ள பிரிட்டன் தூதரகம் சென்று மகாராணிக்கு இரங்கல் தெரிவித்த ரணில்!

## இலண்டனில் 19 இல் நடைபெறும் இறுதி ஊர்வலத்திலும் பங்கேற்பு



கொழும்பிலுள்ள பிரிட்டன் உயர்ஸ்தானிகராலயத்துக்கு நேற்று முற்பகல் சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்தார்.

உயர்ஸ்தானிகராலயத்துக்கு 2

# ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவையின் தலைவரைச் சந்தித்து இலங்கை குழு பேச்சு



ஜெனிவாவுக்குச் சென்றிருக்கும் இலங்கை அரச பிரதிநிதிகளான வெளிவிவகார அமைச்சர் அலி சப்றி மற்றும் நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ ஆகியோர் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 10

# முடிந்தால் 'மொட்டு'விலிருந்து எங்களை நீக்கிக் காட்டுங்கள்!

## ராஜபக்ஷ தரப்புக்கு டலஸ் அணி சவால்



உண்மையான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி உறுப்பினர்கள் நாங்கள் தான். முடிந்தால் கட்சியில் இருந்து எங்களை நீக்கிக் காட்டுங்கள்.

- இவ்வாறு ராஜபக்ஷ தரப்புக்கு பகிரங்கமாக சவால் விடுத்துள்ளது டலஸ் அழகப்பெரும தலைமையிலான 10

# ஆசியக் கிண்ணத்தை சுவீகரித்தது இலங்கை




2022 ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் 10

# 8 மாதங்களில் ஐந்நூறு டாக்டர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்

கடந்த எட்டு மாதங்களில் சுமார் ஐந்நூறு வைத்தியர்கள் வெளிநாடு சென்றுள்ளனர் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் டாக்டர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிலைமை பாரதூரமான விடயம், கடந்த இரண்டு மாதங்களில் வெளிநாடு சென்ற 2

# தமிழ்க் கட்சி தலைவர்கள் யாழ்ப்பாணத்தில் சந்திப்பு

(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,செப்.12

தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்குகின்ற 10

# தேர்தலை ஒத்திவைக்க அரசு தயாராகின்றதாம்!

## 'பவ்ரல்' அமைப்பு குற்றச்சாட்டு

பல்வேறு விடயங்களை முன்வைத்து உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மீண்டும் ஒருமுறை ஒத்திவைக்க அரசாங்கம் தயாராகி வருவதாக சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு (பவ்ரல்) அமைப்புகுற்றஞ் சுமத்தியுள்ளது. 10

# உண்ணாவிரதம் இருக்கும் கைதிகள் நிலை மோசம்

மகஸின் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருக்கும் தமிழ்க் கைதிகளது நிலை மிக மோசமடைந்துள்ளது.

கைதிகளை நேரடியாக சென்று பார்வையிட்டு அவர்களது நிலைவரம் தொடர்பாக கைதிகளது பெற்றோர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களையும் மனிதநேயத்தோடு செயல்படக்கூடிய அனைவரையும் தாங்கள் கேட்டுக்கொள்கின்றனர் 10

# கோட்டாபயவை போய்ப் பார்த்தார் ஜனாதிபதி ரணில்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை, கொழும்பு மலலசேகர மாவத்தையில் உள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்திற்குச் சென்று சந்தித்துள்ளார். 2

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ, சஜித் பிரேமதாஸ போன்றோர் முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனங்கள் வரை எல்லாம் மக்களுடன் செய்து கொள்ளும் உடன்படிக்கை வாசகங்கள்தான்.

வெற்றி பெற்றோர், மக்களுடன் தாம் செய்த அந்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தி, நிறைவேற்ற வேண்டும்.

இது எல்லோருக்கும் தெரிந்த விடயம். எனினும் நேற்று கொழும்பில் அமெரிக்க உயர்நிலை அதிகாரியான சமந்தா பவரைச் சந்தித்த எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் இதையொட்டி ஒரு விடயத்தை அவருக்குச் சுட்டிக் காட்டினர்.

"ஜனாதிபதியாகும் ஒவ்வொருவரும் மக்களுடன் ஏதோ ஓர் உடன்படிக்கையைச் செய்துதான் அப்பதவிக்கு வருகின்றார்கள். அதை நிறைவேற்ற வேண்டியது அவர்களின் கடப்பாடு" - என்றார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

"ஆனால் இப்போது ஜனாதிபதியாக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க அப்படி மக்களுடன் உடன்பாடு செய்து ஜனாதிபதியானவர் அல்லர். அதனால் மக்களுக்குத் தான் செய்ய வேண்டிய கடப்பாடு ஏதும் தமக்கு இல்லை என்று அவர் எண்ணுகிறார் போலும்.

"அவரை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தவர்கள் மக்கள் அலலர். நாடாளுமன்றம்தான். நாடாளுமன்ற உறுப்பினர்களுடன்தான் அவர் உடன்பாடு செய்துகொண்டு ஜனாதிபதியாகி உள்ளார்.

"அதுவும் மொட்டுக் கட்சி உறுப்பினர்களுடன்தான் அவர் உடன்பாடு கண்டார். அதுவும், மூன்றே மூன்று விடயங்கள் தான் அவர் அந்த எம்.பிக்களுடன் உடன்பாடு கண்டவை அல்லது உறுதியளித்தவை.

"அந்த மூன்றும் என்ன? ஒன்று - பொதுத்தேர்தலையோ அல்லது பிற தேர்தல்களையோ இப்போதைக்கு நடத்த மாட்டேன்; இரண்டு - ஆளுங்கட்சி எம்பிக்களின் எரிக்கப்பட்ட வீடுகளுக்கு ஒரு சதம் மிச்சம் விடாமல் நஷ்ட ஈடு தருவேன்; மூன்று - அரசுத் தரப்பு எம்.பிக்களின் பாதுகாப்பை முழு அளவில் உறுதிப்படுத்துவேன்.

"இவைதான் அவர் அந்த எம்.பிக்களுக்கு அளித்த உறுதிகள். இந்த மூன்றும்தான் ஜனாதிபதி தேர்தலில் வெல்வதற்கு அவர் கொடுத்த வாக்குறுதிகள். அதனால் அவற்றை மட்டுமே அவர் முன்னெடுப்பார், முன்னெடுக்கிறார்" - என்றார் சஜித்.

சிரித்துக் கொண்டே விடயம் உள்வாங்கப்பட்டதாக - கிரகித்துக் கொண்டவராக - தலையசைத்தார் சமந்தா பவர்.

***

"முடிந்தால் மொட்டுவில் இருந்து எங்களை நீக்கிக் காட்டுங்கள்!" - என்று டலஸ் தரப்பு எம்.பியான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மொட்டுக் கட்சியின் நிர்வாகிகளுக்கு சவால் விட்டு இருக்கின்றார்.

இதை வாசித்த போது, ஒரு சினிமா படத்தில் ஒரு பெரியவரை ஒரு சின்னப் பையன் 'வாடா! வாடா!' என்று ஒருமையில் கூறி வம்புக்கு இழுக்க, அந்தப் பெரியவரோ நமக்கேன் வீண் சிக்கல் என்று ஒதுங்க, இடையில் வடிவேலு தொலுக்கு முதலி போல புகுந்து, அந்தச் சிறுவனைத் துரத்திச் சென்று, வாகனத்தில் சிக்கி, தன் கிட்னியைப் பறிகொடுத்த நகைச்சுவைக் காட்சிதான் எனக்கு நினைவுக்கு வந்தது.

கிட்னி பிடுங்குவதற்கு அந்தப் பையன் வம்புக்கு இழுத்த மாதிரி பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மொட்டுக்கட்சித் தலைமையை வம்புக்கு இழுக்கின்றார் - சீண்டுகின்றார் - என்கிறேன் நான்.

அதெப்படி என்று புரிகின்றதா வாசகர்களே? ஊகித்துக் கொள்ளுங்கள். நான் நாளை அதன் விவரத்தை விளக்குவேன். அதுவரைப் பொறுத்தருள்க.

- மின்னல் -

## திருக்கோணேஸ் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது -

01) வடக்கு - கிழக்கு உட்பட அனைத்துத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் உடனடியாக திருகோணமலை மாவட்டத்தின் திருக்கோணேஸ்வரம் ஆலயத்தின் இருப்பைப் பாதுகாத்து அதன் நெருக்கடிகளைக் களைய ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் பேசி ஆவன செய்ய வேண்டும்.

02) திருக்கோணேஸ்வரம் ஆலயத்தில் இந்தியத் தூதரகத்தின் உதவியுடன் இராஜ கோபுரம் அமைத்து அதனைக் காத்தல் உள்ளிட்ட விடயங்களை உடனடியாகத் தூதரகத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லல்.

03) திருக்கோணேஸ்வரத்துக்கான யாத்திரையை ஊக்குவித்தல்.

- ஆகிய தீர்மானங்களே நிறைவேற்றப்பட்டுள்ளன.

இந்தக் கலந்துரையாடலில் கலாநிதி ஆறு. திருமுருகன் உரையாற்றும் போது -

திருகோணமலைக் கோணேஸ்வரம் ஆலயத்துக்கு இடையூறான வகையில் தொல்லியல் திணைக்களம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்காகவே திருக் கோணேஸ்வரத்தைக் காக்கும் இந்த முயற்சி நல்லை ஆதீன குருமுதல்வர் தலைமையில் இடம்பெறுகின்றது.

திருகோணமலைக்கு என்ன பதில் என்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் சபையின் கீழே அமர்ந்து குரல் எழுப்புவதைத் தவிர இன்று வேறு மார்க்கம் இல்லை. இதுவே திருக்கேதீஸ்வரத்திலும் இடம்பெற்றது.

அதன்போது அந்த மாவட்ட மக்கள் பிரதிநிதிகள்கூட வாய் திறக்கவில்லை. இது மதம் அன்றி இனம் சார்ந்த அழிவுக்கும் இட்டுச் செல்லப் போகின்றது.

திருக்கோணேஸ்வரம் செய்தி மூலம் திருகோணமலையை அபகரிக்க எடுத்த சதிகள் அம்பலமாகியுள்ளன.

நாம் எல்லாவற்றையும் ஜெனிவாவுக்குகே கொண்டுபோகின்றோம் என்பதும் யதார்த்தத்துக்குப் பொருத்தம் அற்றது. அதேநேரம் தொல்லியல் திணைக்களத்தின் அநியாயமும் சொல்ல முடியாத அளவுக்கு உள்ளது - என்றார்.

## தேர்தல் சீர்திருத்த .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரு நாள் உத்தியோகபூர்வ பயணமாக இலங்கை வந்துள்ள அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தின் நிர்வாகி சமந்தா பவர், நேற்று முற்பகல் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தார். அச்சமயம் கருத்து வெளியிடும்போதே ஜனாதிபதி மேற்படி விடயத்தைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறிய முக்கிய அம்சங்கள் வருமாறு:-

22ஆவது திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதனை நாடாளுமன்றம் நிறைவேற்றும் வரை காத்திருக்கிறோம்.

நாடாளுமன்றத்தில் கண்காணிப்புக் குழுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கு அமெரிக்காவின் ஆதரவை எதிர்நோக்குகிறோம். நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தவிர, ஐந்து இளைஞர் பிரதிநிதிகள் இவற்றுக்கு நியமிக்கப்படஉள்ளனர். இவர்களுக்கு தலைவர் மூலம் கேள்விகளைக் கேட்க உரிமை உண்டு. உலகில் முதன் முறையாக இவ்வாறானதொரு நடைமுறை முன்னெடுக்கப்பட இருக்கிறது. இளைஞர் நாடாளுமன்றத்தைச் சட்டபூர்வமாக்க இருக்கிறோம். பொருளாதாரக் குழுக்களை அதிகரிக்க இருக்கிறோம்.

ஊழலுக்கு எதிரான சட்டங்களுக்கு, நாங்கள் அங்கீகாரம் அளித்துள்ளோம். மேலும் பெண்கள் சமத்துவம் தொடர்பான சட்ட மூலமொன்றை தயாரிக்குமாறு பெண்கள் அமைப்புகளிடம் கேட்டுள்ளேன்.

ஓரினச்சேர்க்கையை குற்றமற்றதாக்கும் வகையில் தனிநபர் பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் அதை எதிர்க்காது. இதற்கு தனிப்பட்ட உறுப்பினர்களின் ஆதரவைப் பெற வேண்டும்.

விவாகரத்து சட்டங்களை இலகுபடுத்தி பரஸ்பர சம்மதத்துடன் விவாகரத்து செய்ய வாய்ப்பளிக்கப்படும்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்படுவோர் தொடர்பில் தமிழ் தரப்புடன் பேசினோம். தடுப்புக் காவலில் இருந்த காலம், அவர்கள் அனைவரும் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டிருப்பது என்பவற்றை கருத்திற்கொண்டு, அவர்களை விடுவிக்க முடியுமா என்பதை அறிய பொறிமுறையொன்றைத் தயாரிக்கக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தலதா மாளிகை மீதான குண்டுத்தாக்குதல் மற்றும் சில எம்.பிகளின் கொலைகள் என்பவற்றுடன் தொடர்புபட்டவர்கள் தவிர ஏனையவர்கள் தொடர்பில் இதன் கீழ் கவனம் செலுத்தப்படும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் தடுப்புக்காவலில் உள்ள முஸ்லிம்களில் விடுதலை செய்யக் கூடியவர்களை அடையாளம்காணுமாறு புலனாய்வு பிரிவுகளுக்கு அறிவித்துள்ளேன். குண்டுத் தாக்குதல் தொடர்பான அறிக்கைகளை மதிப்பாய்வு செய்து, இந்த முழு விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்கு இங்கு வருமாறு ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவத்தின் பின்னால் மறைகரம் இருந்ததா? அப்படியானால், அந்த மறை கரம் யாருடையது? சிலர் அமெரிக்கா என்கிறார்கள். சிலர் இந்தியா என்கிறார்கள். இன்னும் சிலர் சீனா என்கிறார்கள். மற்றவர்கள் பாகிஸ்தான் என்கிறார்கள். அதனால் மறைகரம் எதுவென்று யாருக்கும் தெரியாது.

அத்தோடு மேலும் விடுவிக்கக் கூடிய காணிகள் குறித்து ஆராயப்படுகிறது. காணாமல் போனோர் விவகாரம் குறித்து தீர்வு காண துரிதப்படுத்தப்படும். புனரமைப்புத்திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டு துரிதப்படுத்தப்படும். அத்தோடு வடக்கு அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுக்க இருக்கிறோம். புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம், வடக்கு பாரிய பொருளாதார மையமாக மாற்றப்படும். அபிவிருத்திகள் ஊடாக உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை விட எமக்கு அப்பகுதிகளில் அதிகம் பங்காற்ற முடியும்.

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தையும் கொண்டு வர இருக்கிறோம்.

தேர்தல் சீர்திருத்தம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் உடன்பாடு எட்டப்பட வேண்டும். இது தொடர்பில் கட்சிகள் ஆராய்ந்து வருகின்றன. அவர்களுக்கு ஆறு மாதங்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. கட்சிகளிடையே உடன்பாடு ஏற்படாவிட்டால் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி, உகந்த தேர்தல் முறை தொடர்பாக மக்களிடம் விருப்பத்தை கோருவேன். அரசியல் கட்சிகளால் இந்தப் பிரச்சினைகளை என்றைக்கும் தள்ளிப் போட முடியாது.

கிராம மட்டத்தில் மக்கள் சபை அமைப்பது தொடர்பில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. காலிமுகத்திடல் போராட்டத்திலும் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டது. 14 ஆயிரம் கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கி மக்கள் சபைகள் ஆரம்பிக்கப்படும். - என்றும் அவர் தெரிவித்தார்.

## கொழும்பிலுள்ள பிரிட்டன் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகை தந்த ஜனாதிபதியை இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹல்டன் வரவேற்றார்.

பின்னர் அங்கு வைக்கப்பட்டுள்ள விசேட நினைவுப் புத்தகத்தில் அனுதாபக் குறிப்பை எழுதிய ஜனாதிபதி, ஏழு தசாப்தங்களாக இரண்டாம் எலிசபெத் மகாராணி, உலக மக்களுக்கு ஆற்றிய அளப்பரிய சேவையை நினைவுபடுத்தினார்.

இதேவேளை, எதிர்வரும் 19ஆம் திகதி இலண்டன் - வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் நடைபெறும் எலிசபெத் மகாராணியின் இறுதி ஊர்வலத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொள்ளவுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## 8 மாதங்களில் ஐந்நூறு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியர்கள் பலர் சுகாதார அமைச்சுக்கு அறிவிக்காமல் வெளிநாடு சென்றுள்ளனர் எனவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## கோட்டாபயவை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சந்திப்பு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றதாக அறியப்படுகிறது.

இருவருக்குமிடையில் குறுகிய கால கலந்துரையாடல் இடம்பெற்றது. கோட்டாபய ராஜபக்ஷவிடம் ஜனாதிபதி ரணில் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம் -
076 443 8622






# மஸ்தானின் அமைச்சு பொறுப்பேற்கும் நிகழ்வில் ரெலோ தலைவர் செல்வம் எம்.பி. பங்குபற்றினார்!

கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்ட வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், அமைச்சின் அலுவலகத்தில் சனிக்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்நிலையில் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சரின் கடமையேற்பு நிகழ்வில் அரசாங்க தரப்பினர் பலரும் கலந்து கொண்டதுடன் வன்னி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனும் கலந்து கொண்டார்.

மேலும் அமைச்சர் நளின் பெர்னாண்டோ, இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான முசாரப், செல்வம் அடைக்கலநாதன் உள்ளிட்ட சிலர் மற்றும் அமைச்சின் செயலாளர் உட்பட உயர் அதிகாரிகள், அரசாங்க தரப்பினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



கடந்த 8 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஸ் குணவர்தன தலைமையில் 37 புதிய இராஜாங்க அமைச்சர்கள் பதவியேற்று கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# குருதிச்சோகை நோயினால் கர்ப்பிணித் தாய்மார் பாதிப்பு!

## இம்ரான் மக்ரூப் எம்.பி. நாடாளுமன்றில் சுட்டிக்காட்டு

போசாக்கு குறைப்பாட்டால் பாதிக்கப்படுகின்ற கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் சிறுவர்களுக்கு உரிய தீர்வு வழங்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மக்ரூப் தெரிவித்துள்ளார்.

சிறுவர் மற்றும் தாய்மார்களுடைய குறைபோசனை பிரேரணை தொடர்பிலான நாடாளுமன்ற விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் –

போசாக்குக் குறைப்பாட்டின் காரணமாக தாய்மார்கள் குருதிச்சோகையால் பாதிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது, கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் பிள்ளைகளுக்கும் தேவையான திரிபோஷா உணவு இடை நிறுத்தப்படுள்ளது.

ஆகவே திரிபோா வழங்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும், கர்ப்பிணித் தாய்மார்கள், பிள்ளைகள் போசனை குறைபாட்டால் பாதிக்கப்படுகின்றமைக்கு உரிய தீர்வு வழங்கப்பட வேண்டும்.

மேலும் தற்போது பொருளாதார நெருக்கடியால் கர்ப்பிணித் தாய்மார்கள் குருதிச்சோகை நோயால் அதிகளவில்பாதிக்கப்படுகின்றனர். இதனால்பிள்ளைகளின் வளர்ச்சி வீதம் குறைவடைகிறது. இந்த நிலை குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தில் மிகவும் அதிகளவில் காணப்படுகிறது.

அதேபோன்று கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இலவசமாக செய்யப்பட்ட குருதிப் பரிசோதனை இடைநிறுத்தப்பட்டுள்ளதால் தனியார் வைத்தியசாலைக்கு செல்லவேண்டிய நிலை உள்ளது. அத்துடன் குடும்பநல உத்தியோகத்தர்கள் பல பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். ஆகவே மேற்குறிப்பிட்ட அனைத்து பிரச்சினைகளுக்கும் உடனடி தீர்வு வழக்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# கொரோனாத் தொற்று நாட்டில் அதிகரிப்பு!

கொரோனா தொற்றுக்குள்ளான மேலும் 32 பேர் சனிக்கிழமை அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 6 லட்சத்து 70 ஆயிரத்து 408 ஆக அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ரணிலின் குடுமி ஆடுவது ஏன்?

தாம் ஜனாதிபதி என்றதும் புதிய அச்சுறுத்தல் பாணி அறிவிப்பு ஒன்றை விடுத்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. ஆனால் அது வெறும் புஸ்வாணப் பிரகடனம் தான் என்பது மக்களுக்குப் புரியாது என அவர் எண்ணுகின்றாரோ என்னவோ...?

தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பான முடிவுகளை எடுப்பதற்கு நாடாளுமன்றத்துக்கு ஆறு மாத கால அவகாசம் – கெடு – கொடுத்திருக்கின்றாராம். அதற்குள் நாடாளுமன்றம் ஒரு முடிவைக் காணாவிட்டால், சர்வஜன வாக்கெடுப்பு வைத்து மக்கள் கருத்தைக் கேட்டறிவாராம்.

நல்லது. கேட்டறிந்து என்ன செய்யப் போகின்றாராம்? மக்களின் முடிவைக் கோவையில் கட்டி அடுக்கி வைத்திருக்கலாம். அவ்வளவுதான். மக்கள் விருப்பப்படியான முடிவை நடைமுறைப்படுத்துவது என்றாலும், அது சட்டமாக வேண்டும். வெறும் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் தேர்தல் சட்ட முறைமைகளை உருவாக்கி விட முடியாது. அது நாடாளுமன்றத்தினால்தான் முடியும்.

'அழுதும் அவள்தான் பிள்ளை பெற்றாக வேண்டும்' என்பது போல சட்டத்தை யாக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு மட்டுமே உண்டு. அதற்கு ஜனாதிபதி அல்ல யாருமே – ஏன் நீதிமன்றம் கூட – காலக்கெடு விதிக்க முடியாது.

சர்வஜன வாக்கெடுப்பு என்ற மிரட்டல் பாய்ச்சா நாடாளுமன்றத்திடம் பலிக்காது. அது சிரேஷ்ட அரசியல்வாதியான ரணிலுக்குத் தெரியாதா என்ன? அப்படியானால் ஏன் இத்தகைய அறிவிப்பை அவர் விடுத்தார்?

சோழியன் குடுமி சும்மா ஆடாதல்லவா? இப்போது ரணிலின் குடுமி ஆடுவதற்கான காரணத்தை அறிவதற்கு அவர் பிரதமராக இருந்தபோது – நல்லாட்சி காலத்தில் – நடந்த விடயத்தை நாம் நினைவு கூர வேண்டும்.

அப்போது புதிதாக உருவாகி, வேகமாக எழுச்சி பெற்று வந்த பொதுஜன பெரமுனவை – மொட்டுக் கட்சியை – கண்டு அச்சப்பட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அச்சமயம் தெற்கில் நடத்தப்பட வேண்டிய இரண்டு மாகாண சபைத் தேர்தல்களை அதனால் எதிர்கொள்ளப் பின்னடித்தார். மாகாண சபைத் தேர்தல் சட்டங்களை ஒருங்கு சீரமைக்கிறோம், அதை ஒரு வருடத்தில் முடிப்போம் என்று நாடாளுமன்றுக்கு உறுதி அளித்து, இருந்த மாகாண சபை தேர்தல் சட்டங்களை அப்படியே ரத்தாக்கினார். இப்போது ஐந்து வருடங்கள் கழிந்தும் அந்தத் தேர்தல் சட்டங்களும் வரவில்லை, அதனால் மாகாண சபைத் தேர்தல்களும் நடத்தப்படவும் இல்லை. அந்நிலைமைக்கு ரணிலே முற்றும் முழுதாக காரணம். பொறுப்பு.

இப்போது வரும் 20 ஆம் திகதிக்குப் பின்னர் உள்ளூராட்சித் தேர்தலை எந்த நேரத்திலும் தேர்தல் ஆணையம் அறிவிக்க முடியும். அரசமைப்பின் கீழ் ஆணையத்துக்கு அதற்கான அதிகாரம் தெளிவாக உண்டு.

மீண்டும் ஒரு தேர்தல் சீர்திருத்தம் என்ற கதையை அவிழ்த்துவிட்டு, மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைத்த மாதிரி, உள்ளூராட்சித் தேர்தலையும் நிரந்தரமாக தள்ளிபோட்டு, அதற்கும் ஆப்பு வைக்க தயாராகி விட்டார் அவர்.

புதிய மாகாண சபை தேர்தல் சட்டங்கள் ஒரு வருடத்துக்குள் வரும், பொறுங்கள் என அப்போது ஒரு புருடா விட்டார். இப்போது தேர்தல் சீர்திருத்தம் வரப்போகிறது என்பதைக் காட்டி, உள்ளூராட்சி தேர்தல்களை ஒத்திவைப்பதற்கு ஆறு மாதக் காலக்கெடு கயிறு விடுகிறார் அவர். மாகாண சபை தேர்தல்கள் போல ஆறு வருடங்கள் சென்றாலும் உள்ளூராட்சித் தேர்தல்களும் நடத்தப்படாமல் ஆப்பிழுப்பதற்கான அவரின் முன்னேற்பாட்டு அறிவிப்புதான் இந்தக் காலக்கெடுப் பிரகடனம். நாடாளுமன்றம் உஷாராக இருப்பது அவசியம்.

# உயிருக்கு ஆபத்தான நிலையிலும் தொடர்கின்றது அரசியல் கைதிகளின் உணவு தவிர்ப்பு போராட்டம்!

## செல்வராசா கஜேந்திரன் வேதனை

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் 13 பேரின் உடல்நிலை மிக மோசமான நிலையில் உள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

அரசியல் கைதிகள் 13 பேரும் தங்களது விடுதலையை வலியுறுத்தி உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

இராணுவ புலனாய்வு பிரிவினரால் பொய்யான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு அவர்கள் சிறைகளிலே அடைக்கப்பட்டுள்ளார்கள்.

அவர்களுக்கு எதிராக எவ்விதமான வழக்குகளும் பதியப்படாமல் வழக்குகளுக்கான திகதிகளும் அறிவிக்கப்படாத நிலையில் சிறையில் அவர்கள் அடைக்கப்பட்டுள்ளனர்.

தமிழர் என்ற காரணத்துக்காகத் தான்




அவர்கள் இவ்வாறு பழிவாங்கப்படுவதாகத்தான் நாங்கள் கருதுகின்றோம்.

இதில் பழைய அரசியல் கைதிகள் மற்றும் புதிதாகப் கைது செய்யப்பட்ட அப்பாவி தமிழ் இளைஞர்கள் இருகின்றார்கள்.

தற்போது உண்ணாவிரதம் இருக்கின்ற 13 பேரின் உடல் நிலை மிக மோசமான நிலையை எட்டிக்கொண்டிருக்கின்றது.

எனவே அவர்களுக்கு உயிர் ஆபத்தும் ஏற்படும் நிலையில் உள்ளது.

எனவே சம்மந்தப்பட்ட தரப்பினர் உடனடியாக இதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். – எனவும் இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

# பிரித்தானிய மகாராணியின் மறைவு மைத்திரிபாலவும் இரங்கல் செய்தி



பிரித்தானிய மகாராணியின் மறைவுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது இரங்கல் செய்தியை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

பொதுநலவாய நாடுகளின் தலைவரும், பிரித்தானியாவில் நீண்ட காலம் ஆட்சி செய்த ராணியுமான இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இழப்பு தொடர்பாகக் கேள்விப்பட்டு மிகவும் அதிர்ச்சி அடைந்தேன். 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு எனக்கு ராஜரீதியிலான வரவேற்பு அளித்தமைக்காக நான் எப்பொழுதும் அவருக்கு மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். அரச குடும்பத்துக்கும் பிரித்தானிய மற்றும் பொதுநலவாய மக்களுக்கும் எனது இதயப்பூர்வமான இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். – என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் நியமனம் தன்னுடன் ஆலோசிக்கப்படாமல் நடந்ததாம்!

## மத்திய அரசை விசனிக்கிறார் ஆளுநர் ஜீவன்

வட மாகாண சுகாதார பணிப்பாளரின் புதிய நியமனம் தொடர்பாக மத்திய சுகாதார அமைச்சு தன்னிடம் எதுவும் கலந்துரையாடவில்லை என வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் நியமனத்துக்கு தகுதியானவர்கள் வட மாகாணத்தில் இருக்கும் நிலையில் கொழும்பிலுள்ள ஒருவர் நியமிக்கப்பட்டமைக்கான காரணம் தொடர்பாக வட மாகாண ஆளுநரிடம் வினவிய போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் வடக்கு சுகாதார பணிப்பாளர் நியமனம் தொடர்பில் புதிய ஒருவர் நியமிக்கப்பட்டதன் பின்னரே தான் அறிந்து கொண்டார் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் தான் வெளிநாடு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருப்பதால் மேற்படி விடயம் தொடர்பில் துறை சார்ந்த அமைச்



ருடன் நேரில் கலந்துரையாடவுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவிக்கு மருத்துவ நிர்வாகத்துறை விசேட வைத்திய நிபுணர் திலிப் லியனகே கடந்த வாரம் சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இணைய வழி மூலமாக இரத்தினகல் விற்பனை

3 ஆயிரம் டொலர்கள் பெறுமதி வரையான இரத்தினகல் மற்றும் தங்க ஆபரணங்களை இணைய வழி மூலம் சர்வதேச சந்தைக்கு விற்பனைக்காக சமர்பிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் 300 அமெரிக்க டொலர்களாக இத்தொகை வரையறுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கொழும்புக்கு வருகை தராமல் பிரதான தபால் நிலையங்கள் ஊடாக சுங்க பிரிவின் தேவையை நிறைவு செய்த பின்னர் தேசிய இரத்தின கல் மற்றும் தங்காபரண இணையத்தளத்திற்கு பிரவேசித்து தமது தயாரிப்புகளை சந்தைப்படுத்துவதற்கு வர்த்தகர்களுக்கு முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# சீனாவில் அதிகரித்து வரும் வீட்டுக் காவல் தடுப்புகள்!

ஷி மிங்கிலேயின் கணவர், செங் யுவான், பணியிடங்களில் இடம்பெறும் பாகுபாடுகளுக்கு எதிரான செயல்பாட்டாளராவார். அவர் ஜூலை 2019 இல், மறைமுகச் செயற்பாடுகளுக்கான குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவுடன், சீன பாதுகாப்பு முகவர்கள் அவரது துணைவியாரும் இதே போன்ற குற்றங்களில் சந்தேகத்தின் பேரில் 'வீட்டுக் கண்காணிப்பில்' வைக்கப்படுவார் என அவர் துணைவியாரிடம் தெரிவித்தனர்.

அவரது கணவரைப்போலல்லாமல், ஷி ஒருபோதும் அரசு சாரா நிறுவனங்களில் பணியாற்றியவரல்லர். மேலும் அவரால் தமக்கெதிரான குற்றச்சாட்டுகளைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்று அவர் ஒரு பேட்டியில் கூறினார்.

ஆனால் அதிகாரிகள் அவரிடம் விசாரணை நடத்தப்படுவதாகத் தெரிவித்து அவரின் அடையாள அட்டை, பாஸ்போர்ட், சாரதி லைசென்ஸ், சமூக காப்பீட்டு அட்டை, செல்போன், கணினி மற்றும் வங்கி அட்டைகளை ஒப்படைக்குமாறு அறிவுறுத்தினர்.

180 நாள்கள் வீட்டுக் காவலில் இருந்த ஷி, முதன்மையாக தனது 3 வயது மகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து பயந்தார்.

ஒரு தாயாக, உங்களால் உங்கள் குழந்தையைப் பாதுகாக்க முடியாவிட்டால், பயத்திலிருந்து அவளுக்கு விடுதலை கொடுக்க முடியவில்லை என்றால் – அது என்னை மரண பீதிக்குள் ஆழ்த்தியது. பயமுறுத்துகிறது என்று அவர் கூறினார்.

அவரது கணவருக்கு ஜூலை 2021 இல் ஐந்தாண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.



ஷி மிங்கிலே மற்றும் அவரது கணவர் செங் யுவான். ஷி 180 நாள்கள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார், பின்னர் செங்கும் சந்தேகத்திற்கு இடமான முறையில் கைது செய்யப்பட்டார்.

செவ்வாயன்று வெளியிடப்பட்ட சீனாவில் சட்டத்தின் ஆட்சியை மையமாகக் கொண்ட ஒரு இலாப நோக்கமற்ற – உரிமைக் காவலர்களின் பாதுகாப்புப் பற்றிய ஆராய்ச்சியின் படி, சீன சட்ட அமலாக்கத்தின் வீட்டுக் காவலில் அல்லது 'குடியிருப்பு கண்காணிப்பு 'ஜனாதிபதி ஜி ஜின்பிங்கின் கீழ் இப்போது கடுமையாக உயர்ந்துள்ளது. 2013 வரையில் பத்தாயிரத்துக்கும் குறைவான வீட்டுக் காவல் வைப்புகளே இருந்தன. ஒவ்வொரு ஆண்டும் அதிகாரபூர்வமாக இது அங்கீகரிக்கப்பட்டு இப்போது கால் மில்லியனுக்கும் (இரண்டரை லட்சத்துக்கும்) அதிகமான வீட்டுக் காவல் கைதுகள் இடம்பெறுகின்றன எனக் குழுவின் மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

சீன சட்ட அறிஞர்கள் இந்த நடவடிக்கையானது மோசமான உடல்நிலையில் உள்ள சந்தேக நபர்கள் போன்ற சிறப்பு வழக்குகளுக்கு முன்கூட்டியே தடுப்புக் காவலுக்கு குறைவான நடவடிக்கை மாற்றாக முன்னெடுக்கப்படுவதாக வாதிடுகின்றனர்.

இருப்பினும், சீன மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களை அச்சுறுத்துவதற்கும் அமைதிப்படுத்துவதற்கும் வீட்டுக் காவல் பெரும்பாலும் பாதுகாப்புத் தரப்பினர் மற்றும் பாதுகாவலர்களால் தவறாகப் பயன்படுத்தப்படுவதாகச் சேகரிக்கப்பட்ட சாட்சியங்கள் கூறுகின்றன.

"இது ஒரு நெகிழ்வான கருவியாக மாறியுள்ளது, காவல்துறை அவர்கள் எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று பாதுகாப்புப் பாதுகாவலர்களின் இயக்குனர் பீட்டர் டாலின் கூறினார். வீட்டுக்காவலின் சில பயன்பாடுகள் தடுப்பு மையங்களில் தடுத்து வைக்கப்படுவதை விட சந்தேக நபர்களுக்கு ஒரு சிறந்த தேர்வாக இருக்கலாம், ஆனால் 2012 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் சீனாவின் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் திருத்தங்கள், இந்த நடவடிக்கையை மிகவும் வலிமை குறைந்த மற்றும் குறைந்தபட்ச நீதித்துறை மறுஆய்வுத் தேவைகளுக்கு உட்படுத்திய காரணமாக இதது தவறாகப் பயன்படுத்தும் வாய்ப்பைத் திறந்து விட்டிருப்பதாக அவர் சொன்னார்.

உச்ச மக்கள் நீதிமன்றத்தின் ஒன்லைன் தீர்ப்புத் தரவுத்தளத்தில் பதிவுசெய்யப்பட்ட உத்தியோகபூர்வ வீட்டுக் காவல் வழக்குகளின் எண்ணிக்கையானது 2013 இல் 5,549 இல் இருந்து 2020 இல் குறைந்தது 40,184 ஆக அதிகரித்துள்ளது. இதுவரை குறைந்தது 15,403 பேர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் எனத் தரவுத்தளம் காட்டுகிறது. உரிமைக் காவலர்களின் பாதுகாப்பாளர்கள் தரப்பு இந்தப் புள்ளி விவரத்தைத் தருகின்றது.

சீனாவின் மொத்த சட்ட வழக்குகளில் ஒரு பகுதி மட்டுமே தரவுத்தளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது, மேலும் இது தேசிய பாதுகாப்பைத் தொடுவது அல்லது அதிருப்தியாளர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் சம்பந்தப்பட்ட அரசியல் ரீதியாக முக்கியமான வழக்குகளை அரிதாகவே உள்ளடக்கியது. சமீப ஆண்டுகளில், மக்கள் கவனத்திற்குப் பொருத்தமற்றதாகக் கருதப்படும் சில தீர்ப்புகள் மறையத் தொடங்கியுள்ளன.

மூன்றில் இரண்டு பங்கு வழக்குகள் மட்டுமே வெளிப்படையாகத் தெரியும் மற்றும் சில வீட்டுக்காவல் கண்காணிப்பு வழக்குகள் ஒருபோதும் விசாரிக்கப்படுவதில்லை என்று கருதும் போது, பதிவு செய்யப்படாத வீட்டுக் கைதுகள் தரவுத்தளத்தில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கையை விட குறைந்தது மூன்று மடங்காக இருக்கலாம் என்று உரிமைக் காவலர்களின் பாதுகாவலர்கள் மதிப்பிட்டுள்ளனர். எனவே அடுத்த மூன்று ஆண்டுகளில் இத்தக்கைய சட்டப்பூர்வமான வழக்குகளின்களின் எண்ணிக்கை 1 மில்லியனைக் கடக்கக்கூடும் என்று குழு கணித்துள்ளது.

சீன மனித உரிமைகள் வழக்கறிஞர் டாங் ஜிங்லிங், வீட்டுக் காவலில் வைக்கப்படுவது அதிகரித்திருப்பது, எந்த நேரத்திலும் ஆர்வலர்கள் மீது அது பாயக்கூடிய அரசின் மற்றொரு கருவியாக அது மாறலாம் என நோக்குகிறார். அது எந்தவொரு சிவில் எதிர்ப்பையும் அகற்றுவதே அதன் நோக்கம் என்பதை ஊகிக்கலாம் என்று அவர் கூறினார். நீங்கள் அடைத்து வைக்கப்பட்டவுடன் அதிகாரிகளை சவால் செய்ய அடிப்படைக்கே உங்களுக்கு இடமில்லை.

2011 ஆம் ஆண்டு, டாங் நாசவேலையைத் தூண்டினார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட போது, அவரது மனைவி வாங் யாங்டிங், எந்தக் குற்றமும் செய்தார் எனக் குற்றம் சுமத்தப்படாத போதிலும், சட்டவிரோத வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

தன்னால் வெளி உலகத்தை தொடர்பு கொள்ள முடியவில்லை அல்லது வீட்டை விட்டு வெளியேற அனுமதிக்கப்படவில்லை என்று டாங் கூறினார். அவரது மனைவியைக் கண்காணிப்பதற்காக கனரக ஆள்கள் 24 மணி நேரமும் வாசலில் நின்றிருந்தனர். அவர்களுடன் ஒரு பகுதி வாழ்ந்த அவரது மாமியார் கூட ஷாப்பிங் செல்ல அனுமதி பெற வேண்டிய கட்டாயம் இருந்தது

ஒரு வருடத்தில் எத்தனை வீட்டுக் காவல் தடுப்பு வழக்குகள் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்படுகின்றன, அத்தகைய தடுப்புக்காவல்களின் தீவிரம் மற்றும் ஆக்கிரமிப்பு, மற்றும் உரிமை ஆர்வலர்களின் குற்றச்சாட்டுகள், அவர்கள் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வழங்கப்படாமல் நீட்டிக்கப்பட்ட வீட்டுக் காவலில் வைக்கப்பட்டதாக உரிமை ஆர்வலர்களின் குற்றச்சாட்டுகள் உட்பட, நடைமுறை குறித்த தொலைநகல் கேள்விகளுக்கு பதிலளிக்க சீனாவின் நீதி அமைச்சகம் மறுத்துவிட்டது.

'குடியிருப்பு கண்காணிப்பு' என்பது அதிருப்தியாளர்களை குறிவைக்க சீன பாதுகாப்பு அரசால் பயன்படுத்தப்படும் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு கருவிகளின் ஸ்பெக்ட்ரம் மீது அமர்ந்திருக்கிறது.

பாதுகாப்பு முகவர்கள் உயர்மட்ட செயல்பாட்டாளர்களை, முக்கியமான அரசியல் கூட்டங்களின் போது, விடுமுறைக்கு அழைத்துச் செல்வது போன்று அவர்களை நாட்டின் தொலைதூரப் பகுதிகளுக்கு அழைத்துச் செல்லும் போது, அவர்கள் போராட்டங்களை நடத்த முடியாதபடி முடக்கி விட்டுகின்றனர்.

மனித உரிமைக் குழுக்கள் துஷ்பிரயோகம் மற்றும் சித்திரவதைகளை அனுமதிக்கின்றன என்று குற்றம் சாட்டுகின்ற – குறைந்தபட்ச மேற்பார்வை கொண்ட – தடுப்புக்காவல் மற்றும் விசாரணை நடவடிக்கைகள் அளவில் மிகவும் கடுமையான முடிவில் உள்ளன. கருப்புச் சிறைகள் என ஆர்வலர்கள் மத்தியில் அறியப்படும் மாற்றப்பட்ட ஹோட்டல் அறைகள் உட்பட, பெரும்பாலும் புத்தகங்கள் கூட இல்லாத இடங்களில், சந்தேகத்திற்குரிய நபரை ஆறு மாதங்கள் வரை பொலிஸார் காவலில் வைக்கும் ஒரு வகையான குடியிருப்பு கண்காணிப்பு இதில் அடங்கும்

கோட்பாட்டில், 'வீட்டுக் காவல்' என்பது இந்த தடுப்பு முறையின் மென்மையான பதிப்பாகும். ஹாங்காய் அரசியல் அறிவியல் மற்றும் சட்டப் பல்கலைக்கழகத்தின் காவல் துறைப் பேராசிரியரான Du Xuejing, சமீபத்திய கட்டுரையில், குடியிருப்பு கண்காணிப்பின் சட்டமியற்றும் நோக்கம் ... குற்றவாளியின் தனிப்பட்ட சுதந்திரத்தை தடுத்து வைத்திருப்பது மற்றும் அதிகப்படியான கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பது என்று வாதிட்டார்.

இருப்பினும், வீட்டுக் காவலில் வைக்கப்பட்ட சில ஆர்வலர்கள் இந்த அமைப்பு சில நேரங்களில் வெளிப்படையான அதிகாரப்பூர்வ ஒப்புதல் இல்லாமல். தன்னிச்சையாக பயன்படுத்தப்பட்டதாக குற்றம் சாட்டுகின்றனர்.

வுஹான் அயர்ன் அண்ட் ஸ்டீல் கோர்ப்பரேனின் முன்னாள் ஊழியர் யீற் நிற், ஊதியக் குறைப்புக்களுக்கு எதிராக மீண்டும் மீண்டும் நிறுவனத்தின் மீது வழக்குத் தொடர்ந்தார், ஒரு தசாப்தத்திற்கு முன்னர் மனநல மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டதிலிருந்து, அவரது ஆறாவது மாடி குடியிருப்பில் பாதுகாப்பு அதிகாரிகள் குழு மற்றும் ஒரு டஜன் பாதுகாப்பு கமராக்களுடன் தான் வீட்டுக் காவலில் இருப்பதாக ஒரு நேர்காணலில் கூறினார்.

நான் இந்த சிறிய சிறையில் 2011 முதல் வாழ்ந்து வருகிறேன், என்று அவர் கூறினார்.

நான் வீட்டுக் காவலில் இருப்பதாக சட்டப்பூர்வமாக எந்த அறிவிப்பும் இல்லை. யாரும் என்னைப் பார்க்கவில்லை என்று இன்னும் சொல்கிறார்கள்." – என்றார் அவர்.

(தைவானின் தைபேயில் உள்ள லில்லி குவோ மற்றும் விக் சியாங் ஆகியோர் இந்த அறிக்கைக்கு பங்களித்தனர்.)

**(மூலம்: 'த வொஷிங்டன் போஸ்ட்')**

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ் மக்களினுடைய விவகாரம் வேண்டுமென்றே தவிர்க்கப்பட்டது!

## ஐ.நா. ஆணையரைச் சாடுகிறார் யோதிலிங்கம்



தமிழ் மக்களுடைய விவகாரம் வேண்டுமென்றே அரசியல் ஆய்வாளரும் சட்டத்தரணியுமான சி.அ.யோதிலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மிச்செல் பச்லெட் அம்மையாரின் அறிக்கை வெளிவந்துள்ளது. இது தொடர்பில் ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

'மேற்குலகம் பெருந்தேசியவாதத்துடன் முரண்படுவதைத் தவிர்ப்பதற்காகத் தமிழ் மக்களைத் தனியாக பயணிக்க விடாது தனித் தன்மையைத் துறந்து சிங்கள லிபரல்களுடன் இணைந்து பயணிக்கச் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

சுமந்திரன் இதற்காகத் தான் களமிறக்கப்பட்டார். இம்முயற்சி ஒரு போதும் வெற்றிகளைக் கொடுக்கப் போவதில்லை.

தமிழ் மக்கள் தொடர்பான விவகாரங்கள் சற்றுக் குறைவு தான். தென்னிலங்கை விவகாரங்களே அதிகளவில் வந்துள்ளன.

குறிப்பாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணையில் பலவீனம், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மீள்பிரயோகம், மாணவத் தலைவர்கள் கைது செய்யப்படல் என்பன பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

தமிழ் மக்கள் பற்றிக் கூறிய விடயங்களில் பொறுப்புக் கூறல் பற்றிக் கூறிய விடயம் தான் மிகவும் முக்கியமானது.

தேசிய மட்டத்தில் பொறுப்புக் கூறலுக்கான முன்னேற்றம் தோல்வியடைந்த நிலையில் பொறுப்புக் கூறலையும் நீதியையும் நிலைநாட்டுவதற்கான சர்வதேச மட்டத்திலான அணுகுமுறைகளை பேரவையின் உறுப்பு நாடுகள் முன்னெடுக்க வேண்டும் எனக் கூறியிருக்கின்றார்.

ஆனால் எத்தகைய அணுகுமுறைகள் என எதையும் அவர் குறிப்பிட்டுக் கூறவில்லை.

முன்னைய அறிக்கை ஒன்றில் பேரவைக்கு வெளியே முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் உறுப்பு நாடுகள் தங்கள் நாடுகளின் நீதி முறைப்படியும் விசாரணைகளை மேற்கொள்ள முயற்சிக்க வேண்டும் எனவும் கூறியிருந்தார்.

இந்தத் தடவை உறுப்பு நாடுகள் தங்கள் நாடுகளில் விசாரிக்க வேண்டும் என்பது பற்றி எதுவும் கூறவில்லை.

இது தவிர வடக்கு கிழக்கு மாகாணங்களில் இராணுவப் பிரசன்னத்தைக் குறைக்க வேண்டும் என்றும் இராணுவம் வசமுள்ள அனைத்துத் தனியார் காணிகளையும் உரிய தரப்பினரிடம் ஒப்படைத்தல் வேண்டும் என்றும் தனது பரிந்துரையில் கூறியிருக்கின்றார்.

தமிழ் மக்கள் தற்போது சந்திக்கின்ற ஆக்கிரமிப்புப் பிரச்சினைகள் பற்றியோ அரசியல் கைதிகளின் விடுதலை பற்றியோ எதுவும் கூறவில்லை.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அரசியல் தீர்வு என்கின்ற அடிப்படைப் பிரச்சினை இன அழிப்பிற்குப் பொறுப்புக் கூறல் பிரச்சினை.

ஆக்கிரமிப்புப் பிரச்சினை, அரசியல் கைதிகள் விவகாரம், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், காணி பறிப்பு விவகாரம் உட்பட இயல்பு நிலையை கொண்டு வருதல் பிரச்சினை, சிறப்புக் கவனிப்பை வேண்டி நிற்கின்ற போரால் பாதிக்கப்பட்டோர் உட்பட சாதாரண மக்கள் எதிர் நோக்கும் அன்றாடப் பிரச்சினை என ஐந்து வகைப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர்.

இந்தப் பிரச்சினைகள் ஆணையாளரின் அறிக்கையில் போதியளவு பிரதிபலிக்கப்படவில்லை. தமிழர் விவகாரம் மேலோட்டமாகவே அணுகப்பட்டுள்ளது.

மேலும் மனித உரிமை மீறல் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் தண்டிக்கப்படாமை, பொருளாதாரக் குற்றங்கள், மிதமிஞ்சிய ஊழல் மோசடிகள் என்பவற்றையே தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு பிரதான காரணங்களாக அடையாளப்படுத்துகின்றார்.

உண்மையில் இவை உப காரணங்களே ஒழிய பிரதான காரணங்கள் அல்ல.

பிரதான காரணம் வரலாற்று ரீதியான இன ஒடுக்கு முறையே, இந்தக் காரணம் மிச்செல் அம்மையாருக்கு தெரியாது எனக் கூற முடியாது. இது வேண்டுமென்றே தவிர்க்கப்பட்டிருக்கின்றது.

இன ஒடுக்கு முறையே காரணம் எனக் கூறினால் பெருந் தேசியவாதத்துடன் முரண்பட வேண்டி வரும். இது மேற்குலகத்தினதும் இந்தியாவினதும் பூகோள புவிசார் நலன்களுக்கு எதிரானதாக இருக்கும் என்பதாலேயே பிரதான காரணி தவிர்க்கப்பட்டுள்ளது எனக் கூறலாம்.

இன ஒடுக்குமுறையை ஏற்றுக் கொண்டால் நிலைமாறு கால நீதி பொருத்தமானதாக இருக்காது. பரிகார நீதியே பொருத்தமானதாக இருக்கும்.

மேற்குலக இந்திய சக்திகள் அதற்குத் தயாராக இல்லை. இவற்றைவிட ஆணையாளரின் அறிக்கையை நுணுக்கமாக அவதானித்தால் இலங்கை விவகாரங்களை மனித உரிமை விவகாரங்களாக அவர் பார்ப்பதே தெளிவாகத் தெரியும்.

தமிழர்களுடன் தொடர்புடைய மனித உரிமை விவகாரங்களாகப் பார்க்கப்பட்டவை தற்போது முழு இலங்கைத் தீவுக்குமான மனித உரிமை விவகாரங்களாகப் பார்க்கப்படுகின்றன.

இது வரை காலமும் ஜெனிவா விவகாரம் என்பது தமிழர்களுடன் தொடர்புடைய விவகாரமாகவே பார்க்கப்பட்டது. தற்போது தென்னிலங்கை விவகாரம் பெரிதாகக்காட்டப்படுகின்றது.

சுருக்கமாகக் கூறின் சிறிய கோட்டுக்குப் பக்கத்தில் பெரிய கோடு கீறப்பட்டுள்ளது. இதன் நோக்கம் தமிழர் விவகாரம் பற்றிய பேசு பொருளை சர்வதேச மட்டத்தில் கீழிறக்குவது தான்.

இந்த இடத்தில் தான் ஜெனிவா பற்றி சில கோட்பாட்டு முடிவுகளைத் தமிழ்த்தரப்பு எடுப்பது அவசியமானது.

அதில் முதலாவது தமிழ் மக்களுக்கு சாதகமான தீர்மானங்களை எடுக்காவிட்டாலும் ஜெனிவா தமிழ் மக்களுக்கு கிடைத்த ஒரு சர்வதேச களம் என்பதைத் தமிழ்த் தரப்பு மறக்கக்கூடாது.

இதனால் ஜெனிவா தமிழ் மக்களுக்கு சாதகமாகத் தீர்மானங்களை எடுக்க வேண்டும் எனக் கூறுவதை விட, தமிழ் மக்களின் விவகாரத்தைப் பேசு பொருளாக்கக் கூடிய ஒரு மேடை என்றே அதனைக் கருதுதல் வேண்டும்.

அதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். ஏறத்தாழ இலங்கை நாடாளுமன்றத்தை ஒத்த நிலையை ஜெனிவா கொண்டுள்ளது எனலாம்.

இலங்கை நாடாளுமன்றத்துக்குத் தமிழ்ப் பிரதிநிதிகள் செல்வதால் தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைத்துவிடப் போவதில்லை.

ஆனால் தமிழ் மக்களின் விவகாரத்தைப் பேசு பொருளாக்கக் கூடிய மேடையாக நாடாளுமன்றம் இருக்கின்றது.

அதே வேளை மக்கள் பிரதிநிதிகள் என்ற அங்கீகாரத்தையும் பெறக்கூடியதாக இருக்கும். எனவே ஜெனிவா பற்றி அதீத கற்பனைகள் தேவையற்றவை.

இரண்டாவது அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் ஜெனிவாவில் ஆதிக்க நிலையில் உள்ளது. மனித உரிமைகள் பேரவை ஆணையாளருக்கு சற்று சுயாதீனம் இருந்தாலும் அவரும் அந்த ஆதிக்கத்துக்கு மட்டுப்பட்டவர் தான்.

எனவே தமிழ் மக்கள் தொடர்பாக மேற்குலகம் என்ன அரசியல் நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றதோ அதுவே தமிழர் பற்றிய தீர்மானங்களாக இருக்கும்.

இலங்கைத்தீவு பற்றிய விவகாரங்களில் மேற்குலம் இந்தியாவுடன் இணைந்து செல்வதால் மேற்குலக இந்திய கூட்டு நலன்களே மனித உரிமைகள் பேரவையின் தமிழர் பற்றிய தீர்மானங்களாக இருக்கும் எனக் கூறலாம்.

எனினும் மேற்குலகத்தையும் இந்தியாவையும் கையாள்வதற்கும் தமிழ் மக்களுக்கும் பல பிடிகள் உள்ளன. அந்தப் பிடிகளை வலுவான இராஜதந்திரத்துடன் கையாள்வதற்குத் தமிழ்த்தரப்பு தயங்கக் கூடாது.

அதில் பிரதானமானது இலங்கைத்தீவை மையமாகக் கொண்ட பூகோள அரசியலும் புவிசார் அரசியலுமாகும்.

பூகோள அரசியல் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகத்தின் இருப்புக்கு அவசியமானது. புவிசார் அரசியல் பிராந்திய வல்லரசான இந்தியாவின் இருப்புக்கு அவசியமானது.

உலகலாவிய வகையில் வளர்ந்து வரும் சீனாவின் செல்வாக்கைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அதன் செல்வாக்கைக் கட்டுப்படுத்த வேண்டும்.

குறிப்பாகக் கேந்திர மையமாக இருக்கும் இலங்கைத்தீவில் சீனாவின் செல்வாக்கைக் கட்டுப்படுத்த வேண்டும். அதற்குப் பிரதானமாகம் துணை புரியப் போவது இலங்கைத் தமிழர்கள் தான். தமிழர்கள் மட்டும் தான் தற்போது இலங்கை ஆட்சி அதிகாரக்கட்டமைப்புக்கு வெளியில் நிற்கின்றனர்.

மேற்குலகம் பெருந்தேசியவாதத்துடன் முரண்படுவதைத் தவிர்ப்பதற்காகத் தமிழ் மக்களைத் தனியாக பயணிக்க விடாது தனித்தன்மையைத் துறந்து சிங்கள லிபரல்களுடன் இணைந்து பயணிக்கச் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

சுமந்திரன் இதற்காகத் தான் களமிறக்கப்பட்டார். இம்முயற்சி ஒரு போதும் வெற்றிகளைக் கொடுக்கப் போவதில்லை. இந்தியாவின் புவிசார் அரசியல் நலன்களும் இது போன்றவை தான்.

கேந்திரப்பிரச்சினைக்கு அப்பால், இந்திய தேசியப் பாதுகாப்புப் பிரச்சினை தான் இந்தியாவிற்கு முக்கியமானது. இந்தியாவும் பெருந்தேசிவாதத்துடன் மோதுவதைத் தவிர்ப்பதற்காகவே தமிழர்களின் நலன்களை பின் நிலைக்கு தள்ளி சிங்கள லிபரல்கள் மூலம் முன் செல்லலாம் என நினைக்கின்றது. எனினும் அது தொடர்ச்சியாகத் தோல்விகளையே தழுவியுள்ளது.

இவற்றை விட புலம்பெயர் மக்கள் மேற்குலகத்தைக் கையாளக்கூடியவர்களாக உள்ளனர். தமிழக மக்கள் இந்திய மத்திய அரசைக் கையாளக்கூடியவர்களாக உள்ளனர்.

சர்வதேச சமூகத்தில் வல்லரசுகள் சிறிய அரசுகள் மனித உரிமைவாதிகள் முற்போக்கு ஜனநாயக சக்திகள், ஊடகவியலாளர்கள் என்பவற்றை உள்ளடக்கிய சர்வதேச சிவில் சமூகம் என்பன உள்ளன. சர்வதேச அபிப்பிராயத்தை உருவாக்குவதில் சர்வதேச சிவில் சமூகம் வலுவான பங்களிப்பை வழங்குகின்றது.

கவனமாகக் கையாண்டால் சர்வதேச சிவில் சமூகம் தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாட்டுக்கு பாரிய பங்களிப்பை வழங்கக் கூடியதாக இருக்கும். சர்வதேச அபிப்பிராயத்தைப் புறந்தள்ளி வல்லரசுகளால் பெரியளவிற்கு செயற்பட முடியாது. நான்காவது புலம்பெயர் மக்கள் தமிழ்த்தேசிய அரசியலுக்கு கிடைத்த மிகப் பெரும் வளமாகும். இந்த வளத்தைக் கவனமாக ஒருங்கிணைத்து உச்ச வகையில் செயற்படுத்த வேண்டும்.

இன்று தமிழ் மக்களின் விவகாரம் தொடர்பாக சர்வதேச மட்டத்தில் சில அடைவுகள் கிடைத்திருக்கின்றன என்றால் அதற்குப் புலம்பெயர் மக்களே காரணமாவர். கனடா மத்திய அரசின் இன அழிப்புத் தீர்மானம் இதற்கு நல்ல உதாரணமாகும்.

ஜெனிவா களத்தையும் கூட சற்றுச்சூடாக வைத்திருப்பவர்கள் புலம் பெயர் மக்களே. ஜெனிவா தமிழ் மக்களுக்கு சாதகமாக இன்னமும் வராவிட்டாலும் தமிழ்த் தரப்பு தொடர்ந்து கதவுகளைத் தட்டிக்கொண்டேயிருக்க வேண்டும்.

சீனா இலங்கைத் தீவில் இருந்து அகலும் வரை ஜெனிவா கோவையை மேற்குலகம் மூடப்போவதில்லை. சுருங்கக் கூறின் சடலம் தற்போதைக்கு அடக்கத்துக்குச் செல்லாது. – எனத் தெரிவித்துள்ளார்.

# பொதுஜன பெரமுனவால் நாமலுக்கு புதிய பொறுப்பு!

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு புதிய இளைஞர், யுவதிகளை இணைத்துக்கொள்ளும் பொறுப்பு முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய பொதுஜன பெரமுனவின் பெரும்பா லான உறுப்பினர்கள் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் இந்த விடையத்தை வலியுறுத்தியுள்ளனர் என பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய நாமல் ராஜபக்ஷ தலைமையில் எதிர்வரும் நாள்களில் நாடளாவிய ரீதியில் கட்சி கூட்டங்கள் இடம்பெறவுள்ளதோடு பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி சுயாதீனமாக செயற்படும் அரசியல் தரப்பினரை மீண்டும் ஒன்றிணைக்கும் முன்னெடுப்புக்களை பொதுஜன பெரமுனவின் ஒரு தரப்பினர் மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடதக்கது.

# நுட்பியல் அவத்தை


## கருத்தரிப்பை கண்காணிக்கும் கடிகாரம்

ஜனனி தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் -
தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்



உலகளவில் கடந்த வாரம் முழுவதும் பேசப்பட்ட முக்கியமான நுட்பியல் அவத்தை அப்பிள் நிறுவனம் அறிமுகம் செய்த அப்பிள் வாட்ச் -08 மேம்படுத்தப்பட்ட நுட்பியல் பற்றியதாகும்.

இதில் கருவுறுதல் கண்காணிப்பு சாதனங்கள் இருந்தமையால் பலரதும் கவனத்தை ஈர்த்தது. கர்ப்பத்தை கண்காணிக்கவும், சரிபார்ப்பதற்கான தொழில்நுட்பத்துடன் கூடிய வசதிகளை இந்த சாதனம் கொண்டுள்ளது.



அமெரிக்காவில் அண்மையில் கருக்கலைப்பு குற்றமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதனால் அமெரிக்கப் பெண்கள் மாதவிடாய் சுழற்சியைக் கண்காணிப்பதில் மிகவும் கவனமாகவும் அக்கறையாகவும் உள்ளார்கள். இதனால் அப்பிள் நிறுவனம் அறிமுகம் செய்த இந்த புதிய நுட்பியல் அவத்தை மிகவும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது. இந்த கடிகாரத்தில் மாதவிடாய் சுழற்சி தொடர்பான தரவுகள் பதிவாகும். இவ்வாறு பதிவாகும் தகவல்கள் அனைத்தும் பாதுகாப்பாக இருக்கும் என்றும் அதைக் கடவுச்சொல் அல்லது பயோமெட்ரிக்ஸ் அடையாளங்கள் மூலமே அணுக முடியும் என்றும் ஆப்பிள் நிறுவனம் அறிவித்துள்ளது. பெண்களின் பாதுகாப்பு விடயத்தில் கூடுதல் கவனம் எடுக்கப்பட்டுள்ளதாக அப்பிள் நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த சாதனத்தின் நுட்பியல் வசதி மூலம் பெண்கள் கருத்தரிப்புக்கு முந்தைய நிலை பற்றி அறிவித்தல்களை சீரான காலக்கிரமத்தில் குறுந்தகவல்களாகப் பெற்றுக்கொள்ள முடியும். இந்த வசதி கருத்தரிக்க விரும்பும் பெண்களுக்கு உதவியாகவிருக்கும் என்று ஆப்பிள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட ஆப்பிள் கடிகாரத்தில் ஒருவரது மாதவிடாய் சுழற்சியைப் பற்றிய நுண்ணறிவை பெறுவதற்காக வெப்பநிலைசென்சார் இணைக்கப்பட்டுள்ளது. இது கருமுட்டை வெளியேறும் நேரத்தையும், கர்ப்பத்தை சாத்தியமாக்கும் மாதவிடாய் சுழற்சியைக் கண்டறிய உதவும். மாதவிடாய் சுழற்சியில் ஒருவர் இருக்கும் இடத்தைப் பொறுத்து அவரின் உடல் வெப்பநிலை மாறுகிறது. இது அடிப்படை உடல் வெப்பநிலை என்று அழைக்கப்படுகிறது, கருமுட்டை வெளியேறும் முன் வெப்பநிலை பொதுவாக மிகக் குறைந்த புள்ளியில் இருக்கும். அதே வேளை கருமுட்டை வெளியேறிய பின்னர், அது சிறிது உயரும். இந்த மாற்றம் சென்சர் மூலம் கண்காணிக்கப்படுகின்றது. இதில் ஏற்படும் மாற்றங்கள் அவ்வப்போது அறிவிக்கப்படுகின்றன.

ஆப்பிள் வாட்ச் சீரிஸ் 8இல் இரண்டு சென்சார்கள் உள்ளன. ஒன்று தோலுக்கு அருகாமையிலும் மற்றொன்று வாட்ச் டிஸ்ப்ளேவின் கீழும் காணப்படும். ஒவ்வொரு ஐந்து வினாடிக்கும் ஒரு முறை இரவு முழுவதும் வெப்பநிலையைக் கண்காணிக்கும்.




முன்னதாக, பெண்களுக்கு எப்போது கருமுட்டை வெளிவரும் என்பதை அறிய அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் செய்ய ஆய்வகங்களுக்குச் செல்ல வேண்டியிருந்தது. அது மிகுந்த சிரமமானதும் செலவுமிக்கதுமாக இருந்தது. இப்போது அந்த வசதி கையில் கிடைக்கிறது.

சாதாரண உடல் வெப்பநிலை 98.6 டிகிரி பாரன்ஹீட் ஆகும் போது, பெண்களுக்கு மாதம் முழுவதும் இது மாறிக்கொண்டே இருக்கும். இதனை எளிதாகக் கண்காணிக்கலாம். மேலும், இந்த வசதிகளை கடிகாரத்தில் முடிக்கி விட்டால், இரவு முழுவதும் ஒவ்வொரு 5 விநாடிக்கும் ஒரு முறை உடல் வெப்பநிலை கண்காணிக்கப்படும். கருத்தரிப்பு நிலையை வெளிப்படுத்தும் வகையில் சிறு மாற்றம் தெரிந்தாலும் உடனடியாக கண்டுபிடிக்கப்பட்டு, அது அறிவித்தல்களாக பயனாளர்களுக்குத் தெரிவிக்கப்படும். இந்த கடிகாரத்தை ஒரு முறை முழுமையாக சார்ஜ் செய்தால் 36 மணி நேரம் பயன்படுத்த வழிவகை செய்யும் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த கடிகாரத்தின் விலையானது அமெரிக்க மதிப்பில் 399 டாலர்களாகும்.




கர்ப்ப காலத்தில் ஒரு பெண்ணின் உடலில் ஒரு சிறப்பு ஹார்மோன் human chorionic gonadotropin (hCG) உருவாகிறது. இதனைக் கண்டறிய சிறுநீர் அல்லது இரத்தத்தைப் சோதிப்பதன் மூலம் hCG ஐக் கண்டறியலாம். உடலில் உள்ள எச்.சி.ஜி அளவைப் பார்த்து ஒருவர் கர்ப்பமாக இருக்கிறீரா என்று தீர்மானிக்கப்படுகிறது. இந்த இரசாயனம் கர்ப்பிணிப் பெண்களில் மட்டுமே காணப்படுகிறது மற்றும் கருவுற்ற முட்டை கருப்பையில் இணைந்தவுடன் - கருத்தரித்த 10 நாள்களுக்குப் பிறகு அது உருவாகத் தொடங்குகிறது.

சிறுநீர் அல்லது இரத்தத்தில் உள்ள எச்.சி.ஜி அளவுக்கு எதிர்வினையாற்றுவதன் மூலம் கர்ப்பபரிசோதனைகள் செயல்படுகின்றன. சிறுநீர் பரிசோதனையில், எதிர்வினை காகிதத்தின் ஒரு துண்டு எச்.சி.ஜி ஐக் கண்டறியும்.

மேலும், இரத்தப் பரிசோதனையை மேற்கொண்டால், இரத்தத்தின் மாதிரியை எடுத்து ஆய்வகத்திற்கு அனுப்புவார்கள். ஆய்வகம் உங்கள் இரத்தத்தில் உள்ள எச்.சி.ஜி அளவை தீர்மானிக்கும்.வரலாறு முழுவதும் பல வகையான கர்ப்ப பரிசோதனைகள் உள்ளன. 1900 களின் முற்பகுதி வரை, கர்ப்பத்தைக் கண்டறிவதற்கான சிறந்த முறையானது அறிகுறிகளை உன்னிப்பாகக் கவனிப்பதுதான், 1930 களின் முற்பகுதியில் முதல் மருத்துவ பயோமார்க் கண்டுபிடிக்கப்பட்டது. இது கர்ப்பிணிப் பெண்களின் சிறுநீரில் உள்ள புரதம், மனித கோரியானிக் கோனாடோட்ரோபின் (எச்.சி.ஜி) கண்டறிய உதவியது. முதல் நவீன கர்ப்ப பரிசோதனைகள் நோயெதிர்ப்பு சோதனை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. தற்போது, நவீன கர்ப்ப பரிசோதனைகள் ஒரு பெண் கர்ப்பமாக இருக்கிறாளா? இல்லையா? என்பதை தீர்மானிக்க LFD என்ற ஒரு வகை தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறார்கள். இப்போது அப்பிள் நிறுவனம் அறிமுகம் செய்திருக்கின்ற கைகடிகார வசதி பெண்களுக்கு வாய்ப்பானதாக அமையும் அதே வேளை அச்சுறுத்தல்மிக்கதாகவும் அமையலாம்.

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## காலம் கடந்த ஞானங்கள்

- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 120**

விடுதலைப் புலிகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்ற தீர்மானத்திலேயே அரசியல், இராணுவ உயர் மட்டங்களில் முடிவுகள் புதுடில்லிலிருந்து மேற்கொள்ளப்பட்டன. களத்தில் இருந்து இயங்கிய இந்தியப் படைகளின் தளபதிகள் இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வை முன்னெடுத்திருக்க வேண்டுமே ஒழிய, இராணுவத் தீர்வை நடைமுறைப்படுத்த முயற்சித்தமை இந்தியாவின் அணுகுமுறைக்குத் தோல்வியைத் தந்தது என அபிப்பிராயம் தந்தார்கள்.

விடுதலைப் புலிகளின் போக்குகள் இந்திய தரப்புக்கு தந்த நம்பிக்கையீ



சுந்தர்ஜி

னங்களும், புதுடில்லியின் மேல் தட்டு இராணுவத் தளபதிகள் – தளபதி சுந்தர்ஜி உட்பட – விடுதலைப் புலிகளை இரண்டு வாரங்களுக்குள் பலவீனப்படுத்திவிடலாம் என கொடுத்த தப்புக் கணக்குகளும் அப்படியான தீர்மானங்களுக்கு முண்டு கொடுத்தன.

முன்னாள் இந்திய தூதுவர் டக்ஸிற் கூட தாங்கள் விடுதலைப் புலிகளை விலக்கி, மற்றத் தமிழ்த் தரப்புகளோடு சேர்ந்து இயங்கினால் விடுதலைப் புலிகள் பலவீனப்படுத்தப்படுவார்கள் எனத் தப்புக் கணக்குகள் போட்டு விட்டோம், தமிழ் மக்களிடையேயும், புலம்பெயரிலும், இந்திய அரசிலும் விடுதலைப் புலிகளுக்காக இழையோடிய ஆதரவுகளை நாங்கள் முறையாகக் கணக்கெடுக்கவில்லை, இவை அவர்கள் தொடர்ந்து போராட வழி வகுத்தன என்றும், பிறபாகரனில் இருந்த தலைமைத்துவமும், அவரது இலட்சியப்பற்றும் அவர்களது விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வைத்தன என்றும் பின்னர் கூறுகின்றார்.

இந்தியா கூட ஜே.ஆர். நேர்மையாக, கண்ணியமாக இனப்பிரச்சனைக்குத்



ஜே.ஆர்.

தீர்வு ஒன்றைக் காண விரும்புகிறார் என அவரின் மீது அளவு கடந்த நம்பிக்கை வைத்து நடந்தது, ஆனால் அவரது தந்திரங்களைப் பின்னால்தான் புரிந்து கொள்ள முடிந்தது எனவும் கருத்தாக்கங்கள் செய்தார் டிக்ஸிற்.

இந்தக் காலம் கடந்த ஞானங்கள் உரிமை போரின் இலட்சியத்தையும் அதற்காக போராடிய இளைஞர்களின் அர்ப்பணிப்புகளையும் நியாயப்படுத்தினாலும், பரவணியாகப் பேரினவாதத்தை நிலை நிறுத்தி வந்த மமதையில் நின்ற சிங்கள தரப்புகளை அவ்வளவு சுலபமாக வழிக்கு கொண்டு வந்து விட முடியாது என்பதை அந்தப் பகுதிகளின் மக்களிடம் இருந்து தன்னிச்சையாக எழுந்த எதிர்ப்புகளையும் போராட்டங்களையும் கவனித்து நிதானமாக முன்னேற்ற பாதைகளை கணித்திருக்க வேண்டும்.

ஒப்பந்தத்தை ஏற்படுத்தி இராணுவத்துடன் வந்திருந்தாலும், இந்தியாவின் கைகளில் கூட மேலும் மல்லுக்கட்ட வேண்டிய தேவைகள் இருந்தன. தமிழர்களுக்கான தீர்வு என்பது பொதுவாக பிரிவினையாகவே பார்க்கப்பட்டு, எதிர்ப்புக்கள் ஜே.ஆரைக் கடந்த மட்டங்களில் கூட இருந்தமையால் அதனை மேலோங்கித் திட்டங்களை செயல்படுத்த, அதற்கு உடந்தையாக இல்லாவிட்டாலும், உபத்திரவமாகவாவது இருக்க வேண்டும் என்று நிதானம் கொண்ட பார்வைகள் விடுதலைப்புலிகள் தரப்பில் இருந்து காணப்படவில்லை. உதவிக்கு வந்தவர்களுக்கு தங்களது அதிகாரங்களை நிலை நிறுத்திக் கொள்வதற்காக குறுக்கீடுகளும் தடைகளும் ஏற்படுத்தி, இவற்றை நிலைமைகளைச் சீரழிக்கும் காரணிகளாகவும், தமிழ் மக்கள் சாதித்திருக்கக் கூடியவற்றைக் கூட இழக்கும் தன்மைக்கும் கொண்டு வந்து விடச் செய்து விட்டது.

ஒப்பந்தம் வந்த போது – இந்தியப் படைகள் வந்து இறங்கிய போது – திருகோணமலைதான் இணைந்த வடக்கு, கிழக்குத் தமிழ் பிரதேசத்தின் தலைநகரமாக விளங்கும் என்ற திட்டங்களை தமிழ் மக்கள் வெளிப்படையாகவே பேசிக் கொண்டார்கள்.

ஆனால் இன்றோ இந்தியப் படைகளின் வெளியேற்றத்துக்கு பிறகு பளையில் 1,800 ஏக்கர் காணிகளை சிங்கள இராணுவத்துக்கு விவசாய அபிவிருத்திக்குத் தரப்படுபவை, ரணில் ஜனாதிபதியாக வர முன் இருந்த திட்டங்களில் நடக்கின்றது. திருகோணமலையின் கோணேஸ்வர ஆலயத்திற்குமே தொல்பொருள் ஆணையத்தின் கரவான நகர்வுகளால் பேரினவாதம் முன்னேறும்போது அரசுகளுக்காக காலம் காலமாக வக்காலத்து பேசிய தமிழர் தரப்புகளே செய்வதறியாது கையைப் பிசைந்து கொண்டு நிற்கின்றன.

தமிழ் மக்களுக்கு சைக்கிள் அவர்களது அன்றாட வாகனமாக இருந்தது. அதனைக் கையாளும் லாவகம் இயற்கையாகவே அவர்களிடம் இருந்தது. அதனை பாவனைகளுக்காக அவர்கள் பாவித்த விதங்கள் பிரமிக்கத்தக்கவை. முழுக்



பிரபாகரன்

குடும்பத்தையுமே ஏற்றி, அத்தோடு சந்தை வழியால் போகும்போது இறக்கி விடலாம் என்று இரண்டு வாழைக்குலைகளையும் சமனுக்காக ஒவ்வொரு பக்கமும் கட்டி ஓட்டுகின்ற அனுபவங்கள் அவர்களுக்கு சாதாரணம்.

அதனை ஓட்டுவதற்கும் திசை(பாதை) தெளிவும் சமநிலையின் கணிப்புக்கும் நிதானமும் முக்கியம். திசைகளும் சமநிலையும்நிதானமும்பேணப்படாவிட்டால் சைக்கிளானாலும் அது கவிழ்ந்து விடும். திசை தெரியாமல் ஓடிக்கொண்டு, இடம் வரவில்லையே, அது வராமல் இருப்பதற்கு இந்த வாழைக்குலைகள்தான் பாரமாக இருக்கின்றன, இந்த இடத்தில் இவற்றைக் கழற்றி எறிந்து விட்டால், அது சுலபமாக வரும் எனக் கருதிச் செயற்பட்டால் வாழைக்குலை சந்தைக்கு போகாமல் நடுவிலும், குடும்பம் வீதியிலும்தான் நிற்கும்.

திம்பு மாநாட்டில் சுதந்திரத் தமிழீழம் அமைக்க ஆதரவு தரப் போவதில்லை என இந்தியா வெளிப்படையாகத் தெரிவித்தது. அன்றைக்கும் இன்றைக்கும்



புவியியியல் அரசியலில் சர்வதேசமும் அதனை நாட்டின் பிரிவினையாகப் பார்க்கிறதே ஒழிய, தமிழ்ப் பேசும் மக்களின் கோரிக்கைகள், பிரச்சாரங்களுக்கு ஏற்ப இறைமை மீட்பாகக் கருதவில்லை.

அந்த வெளிப்பாடுகளைக் கணித்து, திசைகளை மட்டுப்படுத்தி, பயணிக்கக் கூடிய அந்தத் திசையில் வரக்கூடிய தூரம் வந்து, அங்கிருந்து மற்றப் பயணங்களை மேற்கொள்வது யதார்த்தமும் சாதுரியமும் ஆகும்.

அனுமானின் துணையோடு மேரு மலையிலிருந்து மூலிகைகளுக்காக சஞ்சீவி சிகரத்தைப் பிளந்து அதனை வானத்தில் பறந்து கொண்டு வந்து தந்து, அதே போல் லங்காபுரிக்கும் சென்று, சீதையின் இருப்பிடத்தை கண்டுபிடித்த போதும், ராமனோ தன் படைகள் அங்கு செல்ல தன் நண்பன் சுக்ரீவனின் உதவியோடு பாறைகளைக் கடலில் போட்டு, அணைகட்டி முன்னேறி, வெற்றியைச் சம்பாதித்தான். இந்த நிதானங்களில் காரிய சித்திக்குத் தேவையாக இருந்த யதார்த்தங்களை விலக்கி, பாரமாய் இருந்த இந்தியப்படைகளை வெளியேற்ற



டிக்ஸிற்

வேண்டும் என்ற எண்ணங்களே மேலெழுந்து காரியங்களை ஆற்ற வைத்தமை மாத்திரமில்லாமல், இராமர் அணையே காலப்போக்கில் கரைந்தோ மறைந்தோ போக வழியானது.

(வளரும்.....)

## உண்ணாவிரதம் இருக்கும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என 'குரலற்றவர்களின் குரல்' அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் போராட்டகாரர்களை சந்தித்து பேசிய அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தேசியப்பட்டியல் நாடாளு மன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் போராட்டத்தை முடிவுறுத்துமாறான கோரிக்கைகளை முன்வைக்க மறுத்திருந்தார்.

குறிப்பாக கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் கொலை முயற்சியில் தொடர்புபட்டார் எனக் கைதாகி தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர் ஒருவரும் போராட்டத்தில் குதித்துள்ளார்.

நீண்ட காலமாக அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக பேசப்பட்டு வரும் நிலையில், அண்மைக் காலங்களில் கைது செய்யப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற தமிழ் இளைஞர்கள் கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் உணவுத் தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்து தொடர்கின்றனர்.

வெறும் நீர் மட்டுமே அருந்தி போராட்டத்தைத் தொடரும் நிலையில் அவர்களது உடல்நிலை மோசமடைந்துள்ளது.

போராட்டத்தை தொடரும் கைதிகள் விவரம் வருமாறு:-

செ.இன்பராஜ்(பூநகரி), உ.உமாசுதன்(பூநகரி), ம.பார்த்தீபன் (பூநகரி), சி.சுதாகரன் (பூநகரி) ச.உதயசிவம் (தாழையடி), பா.நகுலேஸ்வரன்(திருமலை), லு.அஜந்தன்(கிளிநொச்சி), ரா.விவேகானந்தன்(கிளிநொச்சி),யோ.றொபின்சன்(கிளிநொச்சி), ச.சசிதன்(திருமலை), ர.சுஜந்தன்(பூநகரி), வே.சதீஸ்குமார் (திருமலை).

## முடிந்தால் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திர மக்கள் சபை.

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டில் பிரச்சினைகள் இன்னும் தீரவில்லை. ஆனால், இராஜாங்க அமைச்சு நியமனம் இடம்பெறுகின்றது. என்ன நடக்கின்றது எனத் தெரியவில்லை.

ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள், அநாதவராக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்காகவே நாம் புதிய அரசியல் சக்தியை உருவாக்கியுள்ளோம். எமது முடிவில் எந்தத் தவறும் இல்லை.

கட்சியை விட்டு எங்களை நீக்கினால் நிச்சயம் நீதிமன்றத்தை நாடுவோம். முடிந்தால் நீக்கிக் காட்டுமாறு சவாலும் விடுக்கின்றோம்.

ஏனெனில் உண்மையான ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் நாங்கள்தான். கட்சிகளின் தனித்தும் மற்றும் கொள்கைக்காக நாமே முன்னிலையாகியுள்ளோம் - என்றார்.

## ஜெனிவாவில் மனித .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் பிரெட்றிக்கோ வில்லர்ஜஸை சந்தித்துள்ளனர்.

இந்த சந்திப்பின் போது, பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

குறிப்பாக மனித உரிமை நடைமுறைகளை மேம்படுத்துவதில் இலங்கையின் தொடர்ச்சியான ஈடுபாடு மற்றும் தற்போதைய சவால்களை எதிர்கொள்வதற்கான பங்களிப்பு ஆகியன குறித்து கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## தேர்தலை ஒத்திவைக்க .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலை ஒத்திவைக்கும் நடவடிக்கைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கத் தயாராகி வருவதாக பவ்ரலின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் உள்ளிட்ட தேர்தலை ஒத்திவைப்பதற்குத் தாம் ஆதரவாக இல்லை என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஜி புஞ்சிஹேவா குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலை ஒத்திவைப்பதன் மூலம் மக்களின் இறைமைக்குச் சேதம் ஏற்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு நம்புவதாகவும். வரும் 20ஆம் திகதிக்குப் பிறகு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த ஆணைக்குழுவுக்கு அதிகாரம் கிடைக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஆசியக் கிண்ணத்தை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாகிஸ்தான் அணியை 23 ஓட்டங்களால் வீழ்த்தி இலங்கை அணி கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

நேற்றிரவு நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் பந்துவீச்சைச் தேர்வு செய்தது.

அதற்கமைய, முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இலங்கை அணி சார்பாக பானுக ராஜபக்ஷ ஆட்டமிழக்காமல் 71 ஓட்டங்களையும், வனிந்து ஹசரங்க 36 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சில் ஹரிஸ் ரவூப் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

171 என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 147 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

பாகிஸ்தான் அணியின் சார்பாக மொஹமட் ரிஸ்வான் 55 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

இலங்கை அணியின் பந்துவீச்சில் பிரமோத் மதுான் 4 விக்கெட்டுக்களையும், வனிந்து ஹசரங்க 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

அதன்படி, ஆசியக் கிண்ணத்தை இலங்கை அணி 6ஆவது முறையாக கைப்பற்றியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்க் கட்சி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிகளின் தலைவர்கள் நேற்று யாழ்ப்பாணத்தில் சந்தித்து கலந்துரையாடலொன்றை மேற்கொண்டனர்.

திருக்கோணேஸ்வர்ர் ஆலய விவகாரம், திருகோணமலை குச்சவெளி பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளை சிங்கள பிரதேசசெயலக பிரிவுகளுடன் இணைத்து வடகிழக்கு தொடர்ச்சியை இல்லாமல் செய்கின்ற நடவடிக்கை , வடமாகாண சுகாதார பணிப்பாளராக தென்னிலங்கையை சேர்ந்தவரை நியமித்தமை உள்ளிட்ட வடக்கு, கிழக்கில் உள்ள பிரச்சினைகள் தொடர்பில் இதன்போது பேசப்பட்டது. அத்துடன் இந்த விடயங்கள் சம்பந்தமாக ஜனாதிபதிக்குக் கடிதங்களை எழுதுவதற்கும் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஒழுங்குபடுத்தலில் இடம் பெற்ற இந்த கலந்துரையாடலில் அக்கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர்

க.வி.விக்னேஸ்வரன், ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட்டின் தலைவர் த.சித்தார்த்தன், தமிழ்த் தேசிய கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் இதன்போது சந்தித்து கலந்துரையாடினர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
-076 443 8622
kalaikkathiradvt@gmail.com



# ஓர் இராஜாங்க அமைச்சுக்கு செலவிடப்படும் அரச நிதி ஒரு பிரதேச மக்கள் தொகை வாழ்வதற்கு போதுமானது!

## போட்டுத் தாக்குகிறார் அநுர



'ஓர் இராஜாங்க அமைச்சு பதவிக்கு அரசாங்கத்தால் செலவிடப்படும் நிதி ஊடாக ஒரு பிரதேசத்தின் மக்கள் தொகுதியினரை வாழ வைக்க முடியும்' என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கூறுகையில் –

'2016 ஆம் ஆண்டு ரணிலின் அரசாங்கம் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதற்கமைவாக அமைச்சர்களுக்கு உரித்தான சலுகைகள் இராஜாங்க அமைச்சர்களுக்கும் வழங்கப்படும் என சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் ஓர் அமைச்சரவை அமைச்சருக்கு வழங்கப்படும் அனைத்து சலுகைகளும் இராஜாங்க அமைச்சர்களுக்கும் வழங்கப்படுகின்றது. இராஜாங்க அமைச்சர்களுக்குக் கிடைக்காத ஒரே விடயம் அவர்களால் அமைச்சரவை கூட்டங்களில் பங்குப்பற்ற முடியாமை மாத்திரமே.

### அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள்

அத்துடன் இராஜாங்க அமைச்சர் ஒருவருக்கு நிரந்தரமாக மூன்று வாகனங்கள் வழங்கப்படுகின்றதாகவும் இந்த வாகனங்களுக்காக வெளி மாகாணங்களில் உள்ளவர்களுக்கு ஒரு வாகனத்துக்காக ஒரு மாதத்துக்கு 700 லீற்றர் பெற்றோல் வழங்கப்படுகிறது.

மேலும் ' மேல் மாகாணத்தில் உள்ளவர்களுக்கு ஒரு வாகனத்துக்கு ஒரு மாதத்துக்கு 600 லீற்றர் பெற்றோலுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. டீசல் வாகனங்கள் என்றால் வெளி மாகாணங்களில் உள்ளவர்களுக்கு 600 லீற்றர் டீசலுக்கான கொடுப்பனவு மற்றும் மேல் மாகாணத்தில் உள்ளவர்களுக்கு 300 லீற்றர் டீசலுக்குமான கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

இவ்வாறு ஓர் அமைச்சருக்கு பெற்றோல் வாகனங்களுக்காக 2250 லீற்றர் பெற்றோல் வழங்கப்படுகின்றது. ஆனால் ஓட்டோ ஓட்டுநர்களுக்கு முழுக் குடும்பமும் வாழ்வதற்கு 5 லீற்றர் மாத்திரமே வழங்கப்படுகின்றது.

அத்துடன் 'ஓர் அமைச்சரின் அலுவலகத்துக்கு 2 தொலைபேசிகளும், அவரின் வீட்டுக்கு 2 தொலைபேசிகளும், கையடக்கத் தொலைபேசி ஒன்றும் வழங்கப்படுகின்றது. இதற்கமைவாக ஓர் அமைச்சருக்கு ஒரு மாதத்துக்கு 40 ஆயிரம் ரூபா தொலைபேசி கட்டணம் அரசாங்கத்தால் வழங்கப்படுகின்றது.

அத்துடன் அமைச்சர்களுக்கான தொலைபேசி கட்டணங்களானது வரி மற்றும் நிலையான கட்டணங்கள் இன்றியே கணக்கிடப்படுகின்றது.

மேலும் அமைச்சர்களுக்கு வழங்கப்படும் எரிபொருள் கொடுப்பனவுகள் மாதாந்த கொடுப்பனவுகளாக வழங்கப்படுவதாகவும் அந்த மாதத்தின் முதலாம் திகதியில் காணப்படும் எரிபொருள் விலைக்கு அமைவாக கொடுப்பனவுகள் கணக்கிடப்படும்.

அனைத்து அமைச்சர்களுக்கும் வீடு வழங்கப்படுகின்றது. அமைச்சர்கள் உண்பது, குடிப்பது என அனைத்துமே அரசாங்கத்தின் செலவுகள். அதே போன்று ஒவ்வொரு அமைச்சருக்கும் 15 பேர் அடங்கிய நிர்வாகக்குழு ஒன்று வழங்கப்படுகின்றது. குறித்த 15 பேரில் ஐவருக்கு தொலைபேசிகள் வழங்கப்படும். அவர்களின் தொலைபேசி கட்டணங்களும் அரசால் செலுத்தப்படும்.

மேலும் அமைச்சர்களின் பாதுகாப்பிற்காக ஓர் அமைச்சருக்கு 8 பொலிஸார் விகிதம் நியமிக்கப்படுகின்றார்கள். அவர்களுக்கு தேவையான வாகனங்களும் வழங்கப்படுகின்றன. இவ்வாறே பொதுமக்களின் நிதிகள் வீணடிக்கப்படுகின்றன.

அத்துடன் குறித்த அமைச்சர்களின் ஊடாக மற்றுமொரு அமைச்சு உருவாகினால் அதற்காக அலுவலகங்கள் வழங்கப்படும் அந்த காரியாலயத்தின் செலவுகள் அங்கு பணிபுரியும் ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள், சலுகைகள் என அனைத்தும் அரசாங்கத்தால் செலவிடப்படும். ஆகவே இவ்வாறான அமைச்சர்கள் குழு ஒன்றை நடத்துவதற்கு இந்த நாட்டு மக்கள் பாடுப்பட வேண்டுமா? எனவும் அவர் இதன்போது கேள்வி எழுப்பியுள்ளார்.

# ஆடைத் துறை எதிர்நோக்கும் சவால்களை தீர்க்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்!

## ஜனாதிபதி செயலாளர் தெரிவிப்பு



நாட்டுக்கு அதிக வருமானம் தரும் ஆடைத் துறை எதிர்நோக்கும் சவால்களை இனங்கண்டு அவற்றைத் தீர்க்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் எக்கநாயக்க அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஆடைத் துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது மற்றும் அத்துறையில் ஈடுபடுவோரின் தொழில் பாதுகாப்பைப் பாதித்த பாதகமான விளைவுகளைக் கண்டறிவது தொடர்பான கலந்துரையாடல் ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் இடம்பெற்றது.

ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பிரகாரம் ஜனாதிபதி செயலாளர் இந்தப் பணிப்புரைகளை வழங்கினர்.

இலங்கையில், ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களில், ஆடைத் துறை முன்னணி இடத்தைப் பெறுவதுடன், அத்துறையில் ஏற்பட்டுள்ள பின்னடைவைத் தவிர்த்து, அதனை மேம்படுத்துவதற்கான துரித நடவடிக்கைகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டு, அந்நியச் செலாவணி மற்றும் மூலப்பொருள்கள் தொடர்பான பிரச்சினைகள் இத்துறையின் செயல்பாடுகளை எவ்வாறு பாதித்தன என்பது தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டது.

நாடு எதிர்நோக்கும் சவாலான வேளையில் ஆடைத் துறையை பாதுகாப்பதாகவும், அதன் முன்னேற்றத்துக்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் அத்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் உறுதியளித்தனர்.

இது தொடர்பில் உடனடித் தீர்வுகள் மற்றும் ஆலோசனைகளை சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளிடம் தெரிவித்த ஜனாதிபதியின் செயலாளர், வழமையான கலந்துரையாடல்களை மேற்கொண்டு தேவையான தீர்மானங்களை எடுக்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

# கொழும்பில் உணவு பணவீக்கம் 80 வீதமாக அதிகரித்துள்ளது!

கொழும்பில் உணவு பணவீக்கம் (உணவுப் பொருள்களின் விலை அதிகரிப்பு) 80 வீதமாக அதிகரித்துள்ளதாக கொழும்பு நுகர்வோர் சுட்டெண் மூலம் தெரியவந்துள்ளது.

நாட்டில் கடந்த மே மாதம் 58 வீதமாக காணப்பட்ட உணவு பணவீக்கம் ஜூன் மாதம் 75.8 வீதமாக அகரித்துள்ளதாக கொழும்பு நுகர்வோர் சுட்டெண்ணில் பதிவாகியுள்ளது.

இதனிடையே இலங்கையில் சுமார் 57 லட்சம் பேருக்கு போதுமான ஒரு வேலை உணவை பெற்றுக் கொள்ள முடியாத நிலைமையில் இருப்பதாக உலக உணவுத்திட்டம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அத்துடன் அவர்கள் மனிதாபிமான உணவு அவசியத்தின் பின்னணியில் இருந்து வருவதாகவும் உணவுத்திட்டத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு கோடிக்கும் மேற்பட்ட மக்கள் தொகையை கொண்டுள்ள இலங்கையில் கடந்த 70 வருடங்களில் ஏற்பட்ட மிகப் பெரிய பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்டுள்ள கஷ்டங்களை மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர் எனவும் உலக உணவுத்திட்டம் கூறியுள்ளது.

அதேவேளை பொருளாதார சிரமங்கள் காரணமாக தமது அன்றாட வாழ்க்கையில் உணவுத் தேவையை பூர்த்தி செய்துக்கொள்ள முடியாத மிகவும் கஷ்ட நிலைமையை எதிர்நோக்கியுள்ள பல குடும்பங்கள் சம்பந்தமாக தற்போது ஊடங்களில் பரவாக செய்திகளை வெளியாகி வருவதைக் காண முடிகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பு கடற்பரப்பில் 85 பேர் கைதாகியுள்ளனர்!

சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக வெளிநாடு செல்ல முற்பட்ட 85 பேர் படகுகளுடன் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பலநாள் மீன்பிடி படகுகளின் உதவியுடன் இவ்வாறு செல்ல முற்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு கடற்படைக் கட்டளைக்குட்பட்ட ரணவிக்ரம கடற்படைக் கப்பலானது மட்டக்களப்பு கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட ரோந்து நடவடிக்கையின் போது இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

இதில் 18 வயதுக்கு மேற்பட்ட 60 ஆண்கள், 14 பெண்கள் மற்றும் 18 வயதுக்குட்பட்ட பதினொரு சிறார்கள் அடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் மட்டக்களப்பு, திருகோணமலை, மூதூர், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் மடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

0மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக திருகோணமலை துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

இதேவேளை, கடற்படையினரும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து மட்டக்களப்பு துத்திவரம் கடற்கரைப் பகுதியில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில், கைப்பற்றப்பட்ட பல நாள் மீன்பிடிக் கப்பலுக்கு ஆள்களை ஏற்றிச் சென்றதாக சந்தேகிக்கப்படும் 4 டிங்கிகளுடன் ஐந்து சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படைக் கப்பலான ரணவிக்ரமினால் அவர்கள் கைது செய்யப்பட்டு, சந்தேகநபர்கள் மற்றும் டிங்கி படகுகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேலும், பணம் சம்பாதிப்பதற்காக பாதுகாப்பற்ற கப்பல்களைப் பயன்படுத்தி கடத்தல்காரர்கள் ஏற்பாடு செய்துள்ள மனித கடத்தலில் சிக்கி, நாட்டிலிருந்து சட்டவிரோதமாக குடியேற முயற்சித்து, உயிரை பணயம் வைத்து, சட்டத்தின் முன் தண்டனை பெறுவதை தவிர்க்குமாறு கடற்படை பொதுமக்களிடம் வலியுறுத்துகிறது.

# தம்பியை ஆயுதத்தால் குத்தி கொலை செய்த அண்ணன்!

அக்குரஸ்ஸ மாதொல பிரதேசத்தில் சனிக்கிழமை இரவு கூரிய ஆயுதத்தால் தாக்கி நபர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

அலுபோமுல்ல பிரதேசத்தை சேர்ந்த 47 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சனி இரவு குறித்த நபர் தனது மனைவியுடன் பெற்றோர் தங்கியிருந்த வீட்டுக்கு வந்துள்ளார். அப்போது அவரது மூத்த சகோதரர் மேலும் 3 பேருடன் அந்த வீட்டில் மது அருந்திக் கொண்டிருந்தார்.

அங்கு இருவருக்கும் இடையே நிலத்தகராறு தொடர்பாக ஏற்பட்ட வாக்குவாதம் எல்லை மீறி சென்றதையடுத்து மூத்த சகோதரர் கூரிய ஆயுதத்தால் அந்த நபரை தாக்கியுள்ளார்.

படுகாயமடைந்த நபர் ஆதபான வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர் தற்போது பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளமையுடன், அவரைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை அக்குரஸ்ஸ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.09.2022இல் வெளியிடப்பெற்றது.